முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**EA.197/2023 in EP.177/2013 in OS.115/2009**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 04.04.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்-

| | | | |
|---|---|---|---|
| தேதி | 04.04.2024 | சாட்சி | ம..சா.1 |
| பெயர். | அற்புதகாந்தி | வயது.. | 47 |
| கணவர் பெயர். | கலியபெருமாள் | கிராமம்.. | சிறுகாலூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள தகவல்களை நான் தான் என் வழக்கறிஞரிடம் சொன்னேன் என்றால் சரிதான். நானும் என் கணவரும் எப்போதில் இருந்து பிரிந்து வாழ்கிறோம் என்றால் 2005. நீதிமன்றம் மூலமாக சட்டப்படி பிரிந்துவிட்டோமா என்றால் இல்லை. என் மூத்த மகன் அதியமான் என்றால் சரிதான் அவருக்கு தற்போது 30 வயது இருக்கும் என்றால் 27 1/2 வயது. என் 2வது மகன் கபிலனுக்கு 24 வயது, 3வது மகன் கார்த்திகேயனுக்கு 21 வயது. எனக்கும் என் மகன்களுக்கும் வழக்கு சொத்து குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றல் தெயாது. இந்த வழக்கு சொத்து மற்றும் அதமை ஒட்டி உள்ள குளகரை அமைந்துள்ள வீடு சம்மந்தமாக நிலுவையில் இருக்கும் வழக்குகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் குளக்கரையில் இருக்கும் வீடு சம்மந்தமாக வழக்கு இல்லை, நான் குடியிருக்கும் வீடு சம்மந்தமாக வழக்கு உள்ளது,

2. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எப்போது தெரியும் என்றால சுமார் 4 வருடத்திற்கு முன்பு. நான் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தை போலவே எனது கணவர் கலியபெருமாளும் அதேபோல மனுவும், பிரமாண வாக்குமூலத்தையும் இந்த நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. EA.292/2018, EA.219/2014 ஆகிய மனுக்களின் விவரம் எனக்கு

தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன மனுக்களில் என் கணவருக்க எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட காரணத்தினால் அதனை மறைத்து தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2009 ல் வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் வந்து பார்வையிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2009 ல் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது அவருடைய குறிப்பாணையில் நானும் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் போட்டுள்ளேன் ஆனால் அவர்கள் நீதிமன்ற ஆணையர் என்றே எனக்கு தெரியாது பட்டா மாறுதாலுக்காக நினைத்து கையெழுத்து போட்டேன்.

3. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடுவதற்கு முன்பு எனக்கும் என் கணவருக்கும் பதிவு அஞ்சல் மூலம் அறிவிப்பு கொடுத்தார் என்றாலும் நீதிமன்ற ஆணையருடன் VAO, Surveyour, வாதி, பிரதிவாதிகளின் வழக்கறிஞரிகளுடன் உடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அவருடைய அறிக்கையில் கடந்த 01.08.2009 ல் காலை 11 மணியளவில் வழக்கு சொத்தை பார்வையிட்டதாகவும் வாதி, பிரதிவாதியின் மனைவி மற்றும் ஊர் பொது மக்கள் இருந்ததாகவும் அவர்கள் தாக்கீதிமல் கையெழுத்திட்டுள்ளார்கள் எனவும் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது ஆனால் என்னிடம் பட்டா மாறுதலுக்காக கையெழுத்து பெற்றார்கள். வழக்கின் விவரம் குறித்து 2009 ல் ஆண்டில் இருந்து எனக்கு தெரியும் என்றாலும், நானும் என் கணவரும் ஒன்றாக தான் வசித்து வருகிறோம் என்றாலும் சரியல்ல.

4. 28.07.2008 அன்று கடலூர் மாவட்ட ஆட்சியரிடம் வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் வழக்கு சொத்து குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாகவும், பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நானும் என் கணவரும் கையெழுத்திட்டு தான் அந்த மனு கொடுத்தோம் என்றால் இல்லை நான் மட்டும் தான் அந்த மனு கொடுத்தேன். அசல் வழக்கின் மனுதாரர் வேதாச்சலமுதலியார் OS.686/1995 என்ற வழக்கை தாக்கல் செய்து அதன் மூலம் வழக்கு சொத்தை விளம்புகை பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வேதாச்சல முதலியாரை எதிர்த்து என் கணவர் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் அதுபற்றி எந்த விவரமும் எனக்கு தெரியாது. அசல் வழக்கு 2009 தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நானும் என் கணவரும் இந்த வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதற்காக ஒருவரை மாற்றி ஒருவர் இடைக்கால மனுக்கலை தாக்கல் செய்து வருகிறோம் என்றால் இல்லை.

5. நானும் என் கணவரும் ஒன்றாக வசித்து வருகிறோம் என்ற நிலையில் வழக்கிற்காக பொய் கட்சி செய்து வருகிறோம் என்றால் இல்லை. இந்த வழக்கில் 1ம்

எதிர்மனுதாரும், 2ம் எதிர்மனுதாரும் கூட்டு சதியில் ஈடுப்பட்டுள்ளதா பொய் கட்சி எடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை** :

**-இல்லை-**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Principal District Munsif (FAC)
Chidambaram.